துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஊடகவியலாளர் மகிழ்நன் அவர்களின் தாயார் திருமதி மல்லிகா பாலசுப்ரமணியன் அம்மையார் அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள இல்லத்திற்கு நேற்று முன்தினம் (22.1.2026) நேரில் சென்று அவரது திருவுடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

சென்னை பெருநகர வளர்ச்சி குழும கட்டிடத்தின் வளாகத்தில் மொழிப்போர் தியாகிகளான தாளமுத்து நடராஜன் ஆகியோரது திருவுருவ சிலையை திறந்து வைக்க 25 1 2026 ஞாயிற்றுக்கிழமை காலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை தர இருப்பதால் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள் கலந்தாலோசனை கூட்டம் அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர் பாபு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி கழக செயலாளர் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

ரூ. 54.65 இலட்சம் செலவில்

மண்ணடி மல்லிகேஸ்வரர் திருக்கோயிலுக்கு புதிய அன்னதானக் கூடம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்!

சென்னை,ஜன.24- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு (21.01.2026) சென்னை, மண்ணடி அருள்மிகு மல்லிகேஸ்வரர் திருக்கோயிலில் ரூ. 54.65 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அன்னதானக் கூடத்தை பக்தர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தனது நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை செம்மையாக செய்து வருகிறது.

அந்த வகையில், சென்னை, மண்ணடியில் அமைந்துள்ள சுமார் 700 ஆண்டுகள் பழமையான அருள்மிகு மல்லிகேஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூ. 54.65 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அன்னதானக் கூடத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பக்தர்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைத்தார்.

முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற நாள்முதல் ரூ.131 கோடி மதிப்பீட்டில் 147 புதிய அன்னதானக் கூடங்கள் கட்டுவதற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இது வரை 35 அன்னதானக் கூடங்கள் பக்தர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா ராஜன், இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, மாநகராட்சி உறுப்பினர் வெ.பரிமளம்,திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆர்.வெங்கட கோபால கிருஷ்ணன், அறங்காவலர்கள் எம்.கேஆர். மெய்யப்பன், திருமதி ஆர்.மலர் செல்வி, எ.ரமேஷ்குமார், ஆர்.சோழன்,செயல் அலுவலர் வீ.முத்துராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒரு சில சிரமங்களைக் களையும் பொருட்டு

ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்த சில தளர்வுகள்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன. 24 - ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்துவதில் உள்ள சிரமங்களைக் களையும் பொருட்டு விதிமுறைகளில் சில தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என அரசு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் பாரம்பரிய வீர விளையாட்டான ஏறுதழுவுதல் என்னும் ஜல்லிக்கட்டு நடத்துவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. ஜல்லிக்கட்டுக்காகவே மதுரை அலங்காநல்லூரில் "கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்" அமைக்கப்பட்டு அனைவரும் பெருமை கொள்ளும் வகையில் அங்கே ஜல்லிக்கட்டு நடைபெற்று வருகிறது.

17.01.2026 அன்று அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்ட பின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று அதிகக் காளைகளை அடக்கிச் சிறந்து விளங்கக்கூடிய வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கால்நடை பராமரிப்புத் துறையில் உரிய அரசுப் பணியிடங்களில் பணியமர்த்திட வழிவகை செய்யப்படும் என்றும், உலகப் புகழ் பெற்ற தமிழ்நாட்டின் ஜல்லிக்கட்டுக் காளைகளுக்கான சிறந்த உயர்தர சிகிச்சை மற்றும் பயிற்சி மையம் 2 கோடி ரூபாய் செலவில் அலங்காநல்லூர் பகுதியில் அமைக்கப்படும் என்றும் இரண்டு சிறப்பான அறிவிப்புகளை அறிவித்தார்கள்.

மேலும், ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்துவதில் இருக்கும் ஒருசில சிரமங்கள் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அவற்றைப் பரிசீலித்து காளைகளுக்கு எவ்வித துன்பமும் நேராவண்ணமும், ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு இடையூறு இல்லாத வண்ணமும் தமிழ்நாடு அரசு சில தளர்வுகளை வழங்கிட நடவடிக்கை எடுத்துள்ளது.

1. உள்ளூர் காளைகளும், வீரர்களும் பங்குபெறுவதை உறுதி செய்திட ஏதுவாக, ஆன்லைன் பதிவு முறையினை மாற்றி, அந்தந்த மாவட்ட அளவில் முடிவு செய்துகொள்ள வழிவகை செய்யப்படும்.

2. போட்டிகளின் போது இறக்க நேரிடும் மாடுபிடி வீரர்களுக்கு உரிய நிவாரணம் அரசின் சார்பில் வழங்கப்படுகிறது. எனவே, மாடுபிடி வீரர்களுக்கு ஆயுள் காப்பீடு கட்டாயம் என்ற விதி தளர்த்தப்படும்.

3. இதுவரை ஜல்லிக்கட்டு போட்டி நடத்துபவர்களிடம் முத்திரைத் தாளில் பெறப்பட்டு வந்த உறுதி மொழிப் பத்திரம் என்ற நடைமுறை இரத்து செய்யப்படும்.

தமிழ்நாட்டின் பாரம்பரியத்தைக் காப்பதிலும், ஜல்லிக்கட்டு விளையாட்டினைத் தொடர்ந்து ஊக்குவித் திடவும், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தணியில் அமைந்துள்ள

நெடுஞ்சாலைத் துறையின் ஆய்வு மாளிகை புதுப்பிக்கப்படுமா?

சட்டப்பேரவையில் திருத்தணி எஸ்.சந்திரன் கேள்வி!

சென்னை, ஜன.24– சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது திருத்தணி எஸ். சந்திரன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்க அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு :–

திருத்தணி எஸ்.சந்திரன்: திருத்தணியில் அமைந்துள்ள, நெடுஞ்சாலைத் துறையின் ஆய்வு மாளிகை பழுதுபட்டிருப்பதால் அதனை சீரமைத்து, புதுப்பித்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் எ.வ.வேலு: தமிழ் நாட்டைப் பொறுத்தவில், ஆய்வு மாளிகை 58, சுற்றுலா மாளிகை 48, விருந்தினர் மாளிகை 9 என்று தமிழ்நாட்டில் மொத்தம் 115 தங்கும் விடுதிகள் அரசின் சார்பாக இருக்கின்றன. ஆனாலும், 234 தொகுதிகள் இருக்கிற காரணத்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகள் ஒவ்வொன்றிலும் தங்கும் விடுதிகள் கட்ட வேண்டும் என்று கருதுகிறார்கள் அல்லது எண்ணுகிறார்கள். அவர்களுடைய தேவையைக் கருதியே கேள்வியும் கேட்கிறார்கள். அவற்றைக் கட்டிக்கொடுப்பது என்பதை கட்டாயம் செய்ய வேண்டும். திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு. S. சந்திரன் சொன்னதைப் போல, அந்த ஆய்வு மாளிகைக்கு நானே ஒரு முறை நேரில் சென்றேன். அதனைப் பார்வையிட்டபின், இன்னும் அதனை விரிவுபடுத்தவேண்டும் என்று நெடுஞ்சாலைத் துறைக்குச் சொல்லியிருக்கிறேன். அதனை விரிவுபடுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும். சட்டமன்ற உறுப்பினர் மட்டுமல்ல, நிதிக்கேற்பவே எதையும் செய்யமுடியும்.

திருச்சி என்பது ஒரு முக்கியமான மாவட்டத் தலைநகர். ஏனென்றால் திருச்சியில் இறங்கித்தான் டெல்டா பகுதியில் இருக்கிற எல்லா பகுதிகளுக்கும் அரசு அதிகாரிகளும், அமைச்சர் பெருமக்களும், விமான நிலையத்திலிருந்து இறங்கிச் செல்லும் சிறப்பு விருந்தினர்களும், திருச்சியிலிருந்தே அனைத்து பகுதிகளுக்கும் செல்வார்கள். எங்களுடைய மூத்த அமைச்சர் அவர்களும் அதன் முக்கியம் கருதியே இதுகுறித்துச் சொல்லியிருக்கிறார். அதனை நான் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் சொண்டுசென்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பணம் ஒதுக்கித் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். இப்படி ஒரு நிலைதான். 'என் தொகுதியில் நெடுஞ்சாலைத் துறை சம்பந்தப்பட்ட 2 விடுதிகள்' என்று பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்.

பேரவைத் தலைவர்: வள்ளியூர், திசையன்விளை.

அமைச்சர் எ.வ.வேலு: அது ஏற்கெனவே இருப்பதைப் புதுப்பிப்பதற்கு என்ன வழி என்பது தொடர்பானது. புதிதாகக் கட்டுவது என்பது வேறு; புதுப்பிப்பது என்பது வேறு. அதற்கு முன்பாக புதுப்பிப்பதற்கு வேண்டிய பணிகள் இந்த நிதி யாண்டிலோ அல்லது அடுத்த நிதி யாண்டிலோ எடுத்துக் கொள்ளப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

மாவட்ட பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிவிப்பு!

வேலூர், ஜன.24- வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழுக் கூட்டம் இன்று 24.01.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் காட்பாடி எஸ்.ஏ. மஹால், ஆக்ஸிலியம் கல்லூரி, ரவுண்டானா அருகில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து மாவட்டப் பொருளாளர் திரு.சி.நரசிம்மன் அவர்கள் தலைமையில் விவாதிக்கப்பட உள்ளது. வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க விற்குட்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்:

1. மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சார்ந்த முன்னெடுப்புகள் குறித்து.

2. பூத் வாரியாக மகளிர் அணி சார்பில் 10 நபர்கள் சேர்த்தல்.

3. பிப்ரவரி 1 முதல் மார்ச் 8 வரை ஒவ்வொரு வாக்குச் சாவடி தோறும் தேர்வு செய்யப்படும் மகளிரைக் கொண்டு அரசின் பல்வேறு சாதனைகளை பரப்புரை செய்தல்.

4. பிப்ரவரி 1 முதல் 28 வரை சட்டப்பேரவை தொகுதி வாரியாக தெருமுனை அல்லது அரங்கக் கூட்டங்கள் நடத்துவது.

5. வருகின்ற பிப்ரவரி 14 அன்று திருப்பத்தூர் BIA2, BLC மற்றும் BDA ஆகியோருக்கு நடைபெறவிருக்கும் பயிற்சி மாநாட்டில் கலந்து கொள்வது.

6. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் - சென்னை மேற்கு மாவட்ட

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாவட்ட, பகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் வேண்டுகோள்!

சென்னை, ஜன.24- சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாவட்ட, பகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (24-01-2026, சனிக்கிழமை) மாலை 5.00 மணி அளவில் நுங்கம்பாக்கம், காம்தார் நகர், மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு அவர்கள் தலைமையில், துணைச் செயலாளர் எஸ். ராம்குமார் அவர்கள் முன்னிலை வகித்தனர்.

சென்னை மேற்கு மாவட்ட திமுக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாவட்டத்திற்கு உட்பட்ட அண்ணாநகர் பகுதி வடக்கு, தெற்கு, ஆயிரம் விளக்கு பகுதி கிழக்கு, மேற்கு, சேப்பாக்கம் பகுதி மற்றும் திருவல்லிக்கேணி பகுதி ஆகியவற்றில் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணி தலைவர், துணைத்தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1) கழக ஆக்கப் பணிகள்

மொழிப்போர் தியாகிகள் படத்திற்கு மலர் தூவி மரியாதை!

மும்பையில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

மாநில பொறுப்பாளர் அலிஷேக் மீரான் சிறப்புரை!

மும்பை, ஜன.24- மும்பை புறநகர் மாநில திமுக சார்பில் மொழிப்போரில் தம் இன்னுயிரை தியாகம் செய்த தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் வருகிற ஜனவரி 25 காலை 10 மணிக்கு மும்பை கோரேகான் கிழக்கு ஆறே காலனி மார்க்கெட் அருகே நடைபெற உள்ளது.

நிகழ்ச்சிக்கு மாநில பொறுப்புக் குழு உறுப்பினர் சிவக்குமார் சுந்தர்ராஜ் தலைமை தாங்குகிறார். மும்பை மாநில பொறுப்பாளர் அலிஷேக் மீரான் சிறப்புரை ஆற்றுகிறார். மொழிப்போர் தியாகிகள் படத்திற்கு ஜேம்ஸ் தேவதாசன்,

கு. தர்மலிங்கம் ,இளைஞரணி அமைப்பாளர் ந. வசந்த குமார் ஆகியோர் மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

நிகழ்ச்சியில் மும்பை புறநகர பொறுப்பு குழு உறுப்பினர்கள் வதிலை பிரதாபன்,பி. கிருஷ்ணன் இளங்கோஅப்பாதுரை, வே. சதானந்தன், ஜெயினுலாப்தீன் ,வீரை. சோ .பாபு ,பிவண்டி மெஹபூப் பாட்சா , சோ .பா. குமரேசன் ,சிலுவைதாசன், திராவிட கழகம் பெ. கணேசன், அ .ரவிச்சந்திரன் , பிவண்டி ஜாகிர் பாய், முஸ்டாக் அலி, மாஸ்டர் யூசுப், பாண்டுப் பேலஸ் துரை, பாண்டு ,M.துரைராஜ்,

முகமது அலி ஜின்னா ,இளைஞர் அணி வீரமணி , பொய்சர் மூர்த்தி, இளைஞர் அணி அமரன்,சேகர் சுப்பையா ,செ. துரை, எம் கோவிந்தராஜ், பொ. கணேசன் ராதாகிருஷ்ணன் இளையராஜா,ஆறே சிவா, திருமதி. மனோன்மணி , வாசி முத்து, செம்பூர் நம்பி, கோரைகான் விஜயகுமார்,முகைதீன், ரவி ,ஜோகேஸ்வரி தமிழ் இனநேசன் ,ரமேஷ், கனகராஜ், அ.கட்ட முத்து, க.கிருஷ்ண மூர்த்தி , செ .ரமேஷ் தரணிஷ், திருமதி.ஜெயலட்சுமி, கஸ்தூரி ,வாசி பழனி, சயான் சுடலையாண்டி, திவா.வேல் முருகன், முத்தமிழ் தண்டபாணி, வாசி ஆறுமுகம், வாசி தில்லை ,பசுபதி நாதன் ,வேல் முருகன், செம்பூர் பரமசிவம்,

ஜோகேஸ்வரி சுந்தர், ஜோகேஸ்வரி செய்ய து பாய் ,தமிழ்ச்செல்வன், ஆறே காலனி ராஜாங்கம், சுரேஷ்குமார் ,மு .அஜய்,

த. சமுத்திரம் ,தானேபால முருகன் , முலனட் எஸ் .பெருமாள் , பாலசுப்பிரமணியம் , சீதாகாம்ப், ராஜேந்திரன், அந்தேரி பொன்மணி , பொ. ஆனந்த ரமேஷ் மற்றும் பல் வேறு தமிழ் அமைப்பை சார்ந்தவர்களும் கலந்து கொள்கின்றனர்.

43(அ) வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் !

வட்டப் பொறுப்பாளர் ஜெ.பிரேம்ஆனந்த் அறிக்கை!

சென்னை, ஜன.24 சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43 (அ) வட்ட கழக ஆலோசனைக் கூட்டம் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, அறிவுறுத்தலின்படி ஆர். கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், ஆகியோர் ஆலோசனைக்கிணங்க இன்று (24.01.2026 சனிக்கிழமை) காலை10.00 மணியளவில் சென்னை புதுவண்ணை பாலகிருஷ்ணன் முதல் தெருவில் உள்ள எனது இல்லத்தில் உள்ள அலுவலகத்தில் வட்ட அவைத் தலைவர் மு. டில்லிதுரை தலைமையில் நடைபெறுகிறது.

பொருள்: மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்த கழக தலைவர் முதலமைச்சர் வருகை சம்மந்தமாக மற்றும் கழக ஆக்க பணிகள்

ஆகையால் இக்கூட்டத்திற்கு 43(அ) வட்ட கழக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்ட கழக பொறுப்பாளர் ஜெ.பிரேம் ஆனந்த் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம் தோக்கமூர் ஊராட்சியில் தமிழர் திருநாள் தைப்பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகளில் பெற்றவர்களுக்கு பரிசு பொருட்களை தலைமை செயற்குழு உறுப்பினரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினர். உடன் மு.மணிபாலன் எம்.எல்.ரவி எஸ்.ரமேஷ் கே.ஆறுமுகம் மு.பாஸ்கர் எம். கேசவன் டி.மணி கே.பழனி அங்கமுத்து எம்.அருள் அ.மனோகரன் தமிழ்சாதிக் அழகிரி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு108, மேயர் இராமநாதன் சாலையில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தில் உள்ள நியாய விலைக் கடையினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (23.01.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர் எல்.சுந்தர்ராஜன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் திருமதி சண்முக வள்ளி, துணைப் பதிவாளர்கள், அலுவலர்கள் மற்றும் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.